# அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்

Re-accredited with 'A' Grade by NAAC & Affiliated to Bharathidasan University

## தேர்வுத் துறை சுற்றறிக்கை - 1

நாள்: 30.05.2019

ஏப்ரல் 2019ல் நடைபெற்ற U.G., P.G. & M.Phil. பருவத் தேர்வு முடிவுகள் 30.05.2019 அன்று வெளியிடப்பட்டன. தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவ-மாணவிகளுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவ-மாணவிகள் தேர்வு முடிவுகளைத் தத்தம் துறைகளிலும் கல்லூரியின் இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

கல்லூரியின் இணையதள முகவரி: **www.gacakmu.in**

மேற்படி தேர்வில் தேர்ச்சி பெறாத இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள் மறுமதிப்பீடு (Revaluation) மற்றும் உடனடித் தேர்வுகளுக்கு (Instant Examinations) விண்ணப்பிக்கக் கடைசி நாள் **07.06.2019** எனத் தெரிவிக்கலாகிறது.

மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தாள் ஒன்றுக்கு ரூ.300/- (ரூபாய் முந்நூறு) செலுத்தி விடைத்தாள் நகல் (Xerox Copy) பெற்ற பின்னரே மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம். ஒருவர் எத்தனைத் தாள்களுக்கு வேண்டுமானாலும் மறுமதிப்பீடு கோரலாம். இதற்கான கட்டணம் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்குத் தாள் ஒன்றுக்கு ரூ.750/-(ரூபாய் எழுநூற்று ஐம்பது).

படிப்பு முடித்து வெளியில் செல்லும் (Outgoing Students Only) இளநிலை (2016 - 2018 Batch) மற்றும் முதுநிலையில் (2017 - 2018 Batch) தேர்ச்சி பெறாத மாணவர்கள் மட்டும் உடனடித் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஒருவர் அதிகபட்சம் ஏதேனும் நான்கு தாள்களுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும். இதற்கான தேர்வுக் கட்டணம் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்குத் தாள் ஒன்றுக்கு ரூ.1000/-(ரூபாய் ஆயிரம்) மற்றும் விண்ணப்பக் கட்டணம் ரூ.50/- (ரூபாய் ஐம்பது). மாணவ-மாணவிகள் மேற்படி தேர்வுகளுக்கு உரிய விண்ணப்பங்களை **31.05.2019** முதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் பெற்று, துறைத்தலைவர் வழியாக விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.

30/05/19 — 30/5/19

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் — முதல்வர்

நகல்: அனைத்துத் துறைத்தலைவர்கள்.
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்.
தகவல் பலகைகள்.
கல்லூரி இணையதளம்.
கல்லூரி நூலகம்.